# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:157 ★07.10.2026 ★தமிழ் நாளிதழ் ★புதன்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:157 ★07.10.2026 ★TamilDaily ★Wednesday ★Page-4 ★Price-₹5/- Chennai


# தி.மு.க. ஆட்சியில் ரூ.4,730 கோடி மணல் முறைகேடு புகார்:

## லஞ்ச ஒழிப்புத் துறை விசாரணை

தமிழகத்தில் முந்தைய தி.மு.க. ஆட்சிக்காலத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் ரூ.4,730 கோடி மதிப்பிலான ஆற்று மணல் முறைகேடு தொடர்பாக லஞ்ச ஒழிப்புத்துறைவிரிவான விசாரணையை தொடங்கியுள்ளது.

அமலாக்கத்துறை அளித்த புகாரின் அடிப்படையில் இந்த நடவடிக்கை பாய்ந்துள்ளதாக அதிகாரப்பூர்வ வட்டாரங்கள்தெரிவித்துள்ளன.

ஒப்பந்ததாரர்களுக்கு நோட்டீஸ்

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் செயல்பட்டு வந்த 28 ஆற்று மணல் குவாரிகளில், அரசு அனுமதித்த அளவை விடப் பல மடங்கு கூடுதலாகவும், விதிகளை மீறியும் சட்டவிரோதமாக மணல் அள்ளப்பட்டதாக அமலாக்கத்துறை குற்றம் சாட்டியிருந்தது. இதில் பெரும் முறைகேடுகள் அரங்கேறியுள்ளதாக கூறி ஆதாரங்களை வழங்கியிருந்தது.

முதற்கட்ட விசாரணை

இதன் அடிப்படையில், முறைகேட்டில் தொடர்புடைய முக்கிய ஒப்பந்ததாரர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளிட்டோருக்கு லஞ்ச ஒழிப்புத்துறைதற்போது விசாரணை நோட்டீஸ் அனுப்பியுள்ளது. இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்டவர்கள்மீதுமுறைப்படி வழக்குப்பதிவு செய்வதற்கு முன்பாக, முறைகேட்டின் உண்மைத்தன்மையை முழுமையாக உறுதி செய்வதற்காக முதற்கட்ட விரிவான விசாரணை தீவிரமாக நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தரப்பில் கூறப்பட்டு ள்ளது.

முதல்தகவல்அறிக்கை பதிவு

இது தொடர்பாக கடந்த 2024ம் ஆண்டு ஜூன் 13ந் தேதியே, சட்டவிரோத மணல் கொள்ளை குறித்த அனைத்து ஆதாரங்களுடன் அப்போதைய தமிழக டி.ஜி.பி.யிடம் அமலாக்கத்துறை விரிவான அறிக்கை ஒன்றை ஒப்படைத்திருந்தது.

அதில், உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சட்டப்படியான விசாரணை நடத்த கோரியிருந்தது.

நினைவூட்டல் கடிதம்

அதன்பின்னர் மாநிலத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, த.வெ.க. அரசு புதிதாக பொறுப்பேற்றது.இதனைதொடர்ந்து, கடந்த ஜூலை 18ந் தேதி இந்த மணல் கொள்ளை விவகாரம் தொடர்பாக மீண்டும் ஒரு நினைவூட்டல் கடிதமும் அனுப்பப்பட்டதாக தெரிகிறது. இதற்கிடையே, சட்டவிரோத மணல் கொள்ளை தொடர்பாக பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் அமலாக்கத்துறை ஏற்கனவே வழக்குப்பதிவு செய்து தனியாக



விசாரணைநடத்தி வருகிறது.

அதிநவீன தொழில்நுட்ப ஆதாரங்கள்

அமலாக்கத்துறைநடத்தியஇந்தவிசாரணையின் ஒரு பகுதியாக, உத்தரபிரதேச மாநிலம் கான்பூர் ஐ.ஐ.டி. தொழில்நுட்ப நிறுவனத்தின்கீழ் செயல்படும் நிபுணர்களின் உதவியுடன், மேம்பட்ட அறிவியல் தொழில்நுட்பங்கள் மூலம் துல்லியமான ஆதாரங்கள்திரட்டப்பட்டு ள்ளன.

தமிழகம் முழுவதும் உள்ள 28 ஆற்று மணல் குவாரிகளில் எந்த அளவுக்கு ஆழமாக சட்டவிரோதமாக மணல் அள்ளப்பட்டுள்ளது என்பது நவீன ஜியோ ஸ்கேனிங் மற்றும்ட்ரோன்தொழில்நுட்பங்கள் மூலம் அளவிடப்பட்டது. இந்த ஆய்வில், அனுமதிக்கப்பட்ட வரம்பை தாண்டி மணல் அள்ளப்பட்டதும், அதன் மூலம் ரூ.4,730 கோடி அளவுக்கு சட்டவிரோத பணப்பரிவர்த்தனை நடைபெற்றதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சிக்க வைத்த ஜி.பி.எஸ். தரவுகள்

மணல் திருட்டுக்கு பயன்படுத்தப்பட்ட எக்ஸ்கவேட்டர்போன்ற கனரக எந்திரங்களை விற்பனை செய்த நிறுவனங்களிடம் இருந்து பெறப்பட்ட ஜி.பி.எஸ். தரவுகள் இந்த வழக்கில் முக்கிய ஆதாரமாக மாறியுள்ளன.

அந்த எந்திரங்கள் எந்தெந்த இடங்களில், எத்தனை மணி நேரம் இயக்கப்பட்டன, எந்த நேரத்தில் மணல் அள்ளப்பட்டது போன்ற துல்லியமான தகவல்கள் இதன் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளன.

அமலாக்கத்துறை நிபுணர்கள்

மேலும், ஜியோ பென்சிங் உள்ளிட்ட அதிநவீன தொழில்நுட்பங்கள் மூலம் எந்திரங்களின் செயல்பாடுகள் துல்லியமாக கண்காணிக்கப்பட்டன. இந்த தொழில்நுட்பத் தரவுகளை, அரசு அனுமதித்த குவாரிகளின் ஜி.பி.எஸ். எல்லைகளுடனும், அனுமதிக்கப்பட்ட எந்திரங்களின் எண்ணிக்கையுடனும் அமலாக்கத்துறை நிபுணர்கள் ஒப்பிட்டு பார்த்தனர்.

இந்தஆய்வில், மணல் அள்ளுவதற்கு பயன்படுத்தப்பட்ட எந்திரங்கள், அரசு வரையறுத்த எல்லைகளை கடந்து, விதிகளை முற்றிலும் மீறி இயக்கப்பட்டிருப்பது நூற்றுக்கு நூறு உறுதி செய்யப்பட்டுள்ளதாக அமலாக்கத்துறை தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையிலேயே தற்போது லஞ்ச ஒழிப்புத் துறை தனது முதற்கட்ட விசாரணையை தொடங்கியுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சின்னமனூர் நகராட்சியை கண்டுகொள்ளாதது ஏன்? மாவட்ட ஆட்சியருக்கு நகர்வாழ் பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கேள்வி!

தேனி மாவட்டம், சின்னமனூர் நகராட்சியில் கடந்த 100 நாட்களுக்கும் மேலாக நிரந்தர நகராட்சி ஆணையாளர் நியமிக்கப்படாமல் முடங்கி கிடப்பதுடன், மாவட்ட நிர்வாகமும் இப் பிரச்சினையை கண்டுகொள்ளாமல் மௌனம் சாதித்து வருவதாக பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கடுமையாக குற்றம்சாட்டுகின்றனர். ஒரு நகராட்சிக்கு ஆணையாளர் இல்லையென்றாலோ அல்லது அவருக்கு பதிலாக கூடுதல் பொறுப்பு அதிகாரிகள் மட்டுமே நியமிக்கப்பட்டாலோ, அந்த நகராட்சியின் நிர்வாகம் முற்றிலும் செயலிழந்து, தலையில்லாத உடலாகத்தான் செயல்படும் என்பதற்கு சின்னமனூர் நகராட்சியே உதாரணமாக மாறியுள்ளது. நகராட்சி ஆணையாளர் மற்றும் சுகாதார அலுவலர் (SO) உள்ளிட்ட முக்கிய பணியிடங்கள் காலியாக இருப்பதால், அத்தியாவசிய தேவைகளை கவனிக்கவும் நிர்வாக முடிவுகளை உடனடியாக எடுக்கவும் ஆளின்றி, ஒட்டுமொத்த நகராட்சியும் இருண்ட வாழ்க்கையை நோக்கி தள்ளப்பட்டு வருகிறது. முக்கியமாக, அதிகாரிகளின் மேற்பார்வை இல்லாததை சாதகமாக பயன்படுத்தி, நகரில் நடைபெறும் சாக்கடை கட்டுமான பணிகள் மற்றும் சாக்கடைப் பாலம் அமைக்கும் பணிகள் அனைத்தும் முறையான திட்டமிடலோ அல்லது கண்காணிப்போ இன்றி இஷ்டத்திற்கு தரமற்ற முறையில் கட்டப்பட்டு வருகின்றன. அதிகாரிகளின் அலட்சியத்தால் இத்தகைய உள்கட்டமைப்பு பணிகளில் பெரும் முறைகேடுகள் நடப்பதாக சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக, சின்னமனூர் நகர் கண்ணாடி கடை முக்கிலிருந்து எரசை ரோடு ஒத்தவீடு வரை உள்ள முக்கிய தார்ச்சாலை கடந்த 4 ஆண்டுகளுக்கும் மேலாக பராமரிப்பின்றி மிக மிக பழுதடைந்து, வாகன ஓட்டிகளுக்கும் பொதுமக்களுக்கும் நித்தமும் பெரும் ஆ பத்தை விளைவித்து வருகிறது. இந்த




பாதையில்தான் நாள்தோறும் நூற்றுக்கணக்கான பள்ளி வாகனங்கள், விவசாய விளைபொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் அதிக அளவில் பயணித்து வருகின்றனர். நெடுஞ்சாலை துறைக்கு உட்பட்ட இந்த சாலையை சீரமைக்க சுமார் ரூ.2 கோடி வரை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், ஆனால் அந்த நிதியை நகராட்சி நிர்வாகம் விடுவிக்காமல் இழுத்தடித்து வருவதுடன் பணிகளைகிடப்பில் போட்டுள்ளதாகசமூக ஆர்வலர்கள் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர்.

இதுமட்டுமின்றி, தற்போது வானிலை அறிக்கை எச்சரித்துள்ளபடி கனமழை பெய்யத் தொடங்கும் பட்சத்தில், முறையான பராமரிப்பற்ற பாதாள சாக்கடைகளில் கழிவுநீர் நிரம்பி வழிந்து, நகர் முழுவதும் தெருக்களிலேயே கழிவுநீர் ஆறாக ஓடி, நேரடியாக சாக்கடை நீர் பொதுமக்களின் வீடுகளுக்குள் புகும் அவல நிலை ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது. ஏற்கனவே நகரில் சாக்கடை தூர்வாரப்படாமலும், வீடுகளின்குப்பைகள் சரிவர சேகரிக்கப்படாமலும் சுகாதார சீர்கேடு நிலவி வருகிறது. குடிநீரில் கழிவுநீர் கலப்பதாகவும், தூய்மைப் பணியாளர்களுக்கும் ஒப்பந்த நிர்வாகத்திற்கும் இடையே நிலவும் பிரச்சினைகளால் தூய்மைப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குற்றச்சாட்டுகள் தொடர்கின்றன. மேலும், அனுமதியின்றி வைக்கப்படும் பேனர்கள், சாலைகளில் தோண்டப்படும் குழிகள் மற்றும் ஆக்கிரமிப்புகளால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, ஆம்புலன்ஸ் மற்றும் பள்ளி வாகனங்கள் ஸ்தம்பிக்கும் அவலமும் நீடிக்கிறது.

எனவே, பெரும் விபத்துக்களோ அல்லது நோய் பரவலோ ஏற்படுவதற்கு முன், தேனி மாவட்ட ஆட்சியர் அவர்கள் சின்னமனூர் நகராட்சிக்கென தனியாக ஒரு நாளை ஒதுக்கி, நேரில் வருகை தந்து கள ஆய்வு செய்ய வேண்டும் என்றும், உடனடியாக நிரந்தர ஆணையாளரை நியமித்து, கடந்த 4 ஆண்டுகளாக முடங்கி கிடக்கும் ரூ.2 கோடி சாலைப் பணிகளுக்கான நிதியை விடுவிப்பதுடன் தரமற்ற சாக்கடை கட்டுமான பணிகளையும் சீரமைக்க வேண்டும் என்றும் சின்னமனூர் நகர்வாழ் பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் உருக்கமான வேண்டுகோளுடன் கூடிய கோரிக்கையை முன்வைக்கின்றனர்.



# ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் சுகாதாரத்துறை அமைச்சர் திடீர் ஆய்வு

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அரசு தலைமை மருத்துவமனையில்தமிழகசுகாதாரத்துறை அமைச்சர் அருண்ராஜ் இன்று திடீர் ஆய்வுமேற்கொண்டார்.

மருத்துவர்களின் வருகைப் பதிவேடு, மருந்துகளின் இருப்பு, டெங்கு தனி சிகிச்சை வார்டு, கழிப்பறைகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை அமைச்சர் நேரில் பார்வையிட்டார்.

மேலும், உள்நோயாளிகளை நேரில் சந்தித்து சிகிச்சை மற்றும் மருத்துவமனை வசதிகள் குறித்து குறைகளை கேட்டறிந்தார். மருத்துவமனையை தூய்மையாக பராமரித்து, நோயாளிகளுக்கு தேவையான மருத்துவ சேவைகளை தாமதமின்றி வழங்க வேண்டும் என மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

# ரூபாய் 20.15 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ள பழனி ரயில் நிலையம் வரும் அக்டோபர் 11 அன்று திறப்பு

அறுடை வீடுகளில் ஒன்றான பழனி முக்கிய ஆன்மீக தலமாக திகழ்ந்து வருகிறது !! இங்கு உள்ள ரயில் நிலையம் மூலம் தினமும் ஆயிரக்கணக்கான பயணிகள் ரயில் மூலம் வந்து செல்கின்றனர் // அவர்களுக்கான அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் நாடு முழுவதும் அறிவிக்கப்பட்ட அமிரித் பாரத் ரயில் நிலைய மறு சீரமைப்பு திட்டம் மதுரை கோட்டத்தின்கீழ் பழனி ரயில் நிலையத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது

“ ₹ 20.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த திட்டம் முழுவதும் தற்போது பணி அனைத்தும் நிறைவு பெற்று உள்ளது // வரும் அக்டோபர் 11 அன்று சென்னை வரக்கூடிய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தமிழ்நாட்டில் 5 அம்ரித் பாரத் ரயில் நிலையங்களை தெரிந்து வைக்க உள்ளார் // அதில் பழனி PLNI ரயில் நிலையமும்ஒன்றாகஇடம்பெற்று உள்ளது ”






#பழனி ரயில் நிலையத்தில் பயணிகள் எளிதாக அணுகும் வகையில் ஏராளமான வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது !!

★ குறிப்பாக ரயில் நிலையத்தின் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது கழிப்பறை குடிநீர் நடைமேடை தளம் மற்றும் மேற்கூரைகள் உள்ளிட்டவைகள் புதிதாக இங்கு அமைக்கப்பட்டிருக்கிறது

★ மேலும் பயணிகள் நடைமேடை எளிதாக மாறும் வகையில் நடைமேம்பாலம் ஒன்றும் 6மீ நீளத்தில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கிறது

★ ரயில் நிலையத்தில் உள்ள நடைமேம்பாலம் புதிதாக சீரமைக்கப்பட்டு அதில் லிப்ட் வசதி மேம்படுத்தப்பட்டுள்ளது // இதன் மூலம் பயணிகள் கொண்டுவரக்கூடிய உடைமைகள் மற்றும் வயதானவர் மாற்றுத்திறனாளிகள் கர்ப்பிணிகள் எளிதாக நடைமேடை மாறும் வசதி பழனியில் கிடைக்கப்பெறுகிறது

★ பயணிகளுக்கான காத்திருப்பு அறைகள் நவீன டிக்கெட் கவுண்டர்கள் மற்றும் அழகான தோற்றம் உள்ளிட்ட ரயில் நிலையத்தை இன்னும் அழகாக காட்சியளிக்கிறது

“ குறிப்பாக பழனி ரயில் நிலையம் முருகன் கோவிலின் அழகான தோற்றம் மற்றும் மயில் உள்ளிட்ட அழகான காட்சிகளை தருகிறது ”

>> மாற்றுத்திறனாளிகள் ரயிலுக்காக ரயில் நிலையத்தை அணுகும் வகையில் சாய்தள வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளது !! பிரத்தியேகமான கழிப்பறை வசதிகள் மற்றும் பார்வை மாற்றுத்திறனாளிகள் எளிதாக நடைமேடையை அணுகும் வகையிலான டைல்ஸ் உள்ளிட்டவை அமைக்கப்பட்டுள்ளது !!

“ இவ்வாறு பயணிகளுக்கான அடிப்படை தேவைகள் அனைத்தும் மேம்படுத்தக்கூடிய ஒரு திட்டம்தான் இந்த அம்ரித் பாரத் திட்டம் ”

இதில் தெற்கு ரயில்வே மண்டல அளவில் 90 ரயில் நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது !!

>> இதில் ஏற்கனவே 35 ரயில் நிலையங்கள் பணிகள் நிறைவு பெற்று திறப்பு விழாவும் நடைபெற்று இருக்கிறது !! ஒரு அக்டோபர் 11 அன்று பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் மேலும் 5 ரயில் நிலையங்களை திறந்து வைக்க உள்ளார் !! இதன் மூலம் ஒட்டுமொத்த தெற்கு ரயில்வே அளவில் 40 நிலையங்கள் முழுவதும் சீரமைக்கப்பட்ட நிலையங்களாக அம்ரித் பாரத் திட்டத்தில் மாறுகிறது

#பழனி அம்பாசமுத்திரம் பரமக்குடி நாமக்கல் வேலூர்கண்டோண்மென்ட் ஆகிய 5 ரயில் நிலையங்கள் வரும் அக்டோபர் 11 அன்று சென்னையிலிருந்து காணொளி காட்சி மூலமாக தெரிந்து வைக்கப்பட உள்ளது

## இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன். அம்மூர் பேரூராட்சியில் வளர்ச்சி திட்டப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (06.10.2026) வாலாஜா வட்டம், அம்மூர் பேரூராட்சிக்குட்பட்ட சமத்துவபுரம் பகுதியில் அயோத்திதாஸ் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1 கோடி மதிப்பிட்டில் கட்டப்பட்டு வரும் சமுதாயக் கூடத்தினையும். நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.15 இலட்சம் மதிப்பிட்டில் கட்டப்பட்டு வரும் அங்கன்வாடி மையத்தினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, காய்ச்சல் பாதிப்புகள் குறித்தும், வழங்கப்படும் மருத்துவ சிகிச்சைகள் குறித்தும் மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். பின்னர், கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கினார்.



பாடுகளை நேரில் பார்வையிட்டு அறிவுரைகள் வழங்கினார்.

பின்னர், அம்மூர் பேரூராட்சி ஆதி திராவிடர் நல தொடக்கப் பள்ளியில் மாணாக்கர்களின் கற்றல் அறிவுத் திறன் குறித்து ஆய்வு மேற்கொண்டு, மாணாக்கர்களுடன் கலந்துரையாடினார். தொடர்ந்து. சமையற்கூடத்தில் பார்வையிட்டு சமையல் பாத்திரங்கள், சமையலறையினை எப்பொழுதும் சுத்தமாக பராமரிக்க வேண்டுமென சத்துணவு பணியாளருக்கு அறிவுருத்தினார்.

தொடர்ந்து, அம்மூர் பேரூராட்சி கூட்ரோடில் உள்ள நியாய விலைக்கடையில் உணவுப்பொருட்களின் தரம், இருப்பளவு குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம், மருதாளம் ஊராட்சியில் VBG RAM G திட்டத்தின் கீழ் குளம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு பணிகளை விரைவாக முடிக்குமாறு அறிவுருத்தினார்.

இந்த ஆய்வினில் வேலூர் மண்டல பேரூராட்சிகள் உதவி செயற்பொறியாளர் திரு.ந.ராஜா, முதன்மை கல்வி அலுவலர் திருமதி.மோகனா, பேரூராட்சி செயல் அலுவலர் திரு.கி.அர்ச்சுணன், மாவட்ட திட்ட அலுவலர் செல்வி.மு.சாந்தி பிரியதரிசினி, வாலாஜா வட்டாட்சியர் திரு.பன்னீர்செல்வம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்

வையிட்டு விரைவில் பணிகளை முடிக்குமாறு அறிவுருத்தினார். தொடர்ந்து. சமத்துவபுரம் பகுதியில் உள்ள அங்கன்வாடி மையத்தின் செயல்பாடுகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, அம்மூர் பேரூராட்சிக்குட்பட்ட திடக்கழிவு மேலாண்மை வளமீட்புப் பூங்காவில் அம்மூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டுகளில் பெறப்படும் குப்பைகளிலிருந்து மக்கும்/ மக்காத குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கும் செயல்

தொடர்ந்து, அம்மூர் பேரூராட்சிஅரசினர்மேல் நிலைப் பள்ளியில் மாணாக்கர்களின் கற்றல் அறிவுத் திறன் குறித்து ஆய்வு மேற்கொண்டு, மாணாக்கர்களுடன் கலந்துரையாடினார். பின்னர், விளையாட்டு, திறனறிவு, பசுமை இயக்கம், எழுத்தறிவு, ஊட்டச்சத்து உள்ளிட்ட பிரிவுகளில் சிறந்த விளங்கிய மாணாக்கர்களுக்கு பேட்ச் வழங்கி ஊக்கப்படுத்தினார்.

தொடர்ந்து, அம்மூர் பேரூராட்சியிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்நோயாளிகள் பிரிவு, புறநோயாளிகள் பிரிவு, மருந்தகம், ஆய்வகம் உள்ளிட்டவற்றை பார்

## "கம்பத்தில் மின் கசிவால் தீப்பிடித்து எரிந்த வீடு"

## பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு நேரில் ஓடிவந்து நிதியுதவி மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வழங்கி கம்பம் எம்.எல்.ஏ. பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா ஆறுதல்

தேனி மாவட்டம் கம்பம் பாரதியார் நகர் 4வது தெற்கு வீதியில் வசித்து வருபவர் செல்வகுமார். இவரது மனைவி ரம்யா. கடந்த சில தினங்களுக்கு முன்பு இவர்களது வீட்டில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மின் கசிவு காரணமாக திடீரென



தீப்பற்றியது.

சிறிது நேரத்தில் தீ மளமளவென வீடு முழுவதும் பரவியதில், வீட்டில் இருந்த வீட்டு உபயோக பொருட்கள், துணிமணிகள் மற்றும் நகை, பணம் உள்ளிட்ட அனைத்து பொருட்களும் தீயில் கருகி பெரும் சேதமடைந்தன.

இக்கொடூர தீ விபத்து குறித்து தகவல் அறிந்தவுடன், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா உடனடியாக சம்பவ இடத்திற்கு நேரில் விரைந்து சென்று, சேதமடைந்த வீட்டை முழுமையாக பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து, தீ விபத்தால் தங்களது வாழ்வாதாரத்தை இழந்து தவித்த செல்வகுமார் – ரம்யா தம்பதியினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறிய எம்.எல்.ஏ., விபத்து ஏற்பட்ட விதம் மற்றும் சேத விவரங்கள் குறித்து அன்போடு கேட்டறிந்தார். மேலும், பாதிக்கப்பட்ட குடும்பத்தின் உடனடி தேவைகளை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு தேவையான அரிசி, காய்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள், வீட்டு உபயோக பொருட்கள் மற்றும் ரொக்க நிதியுதவி ஆகியவற்றை வழங்கி, 'எந்நேரமும் உங்களுக்கு துணையாக இருப்பேன்' என உறுதியளித்தார். இதனைத் தொடர்ந்து, கம்பம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு நேரில் சென்ற எம்.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா, தீ விபத்து குறித்த தகவல் கிடைத்ததும் விரைந்து செயல்பட்டு, தீ மேலும் அருகிலுள்ள வீடுகளுக்கு பரவாமல் தடுத்து கட்டுக்குள் கொண்டு வந்த தீயணைப்பு வீரர்களை நேரில் சந்தித்து அவர்களின் துரித பணியை பாராட்டி வாழ்த்து தெரிவித்தார். நிகழ்ச்சியின்போது, தேனி தென்மேற்கு மாவட்ட கழக இணை செயலாளர் கூடல் செல்வேந்திரன், செயற்குழு உறுப்பினர் அய்யர் ராம்குமார், கம்பம் நகர தெற்கு செயலாளர் சதீஷ், பொருளாளர் அபு, மாவட்ட இளைஞரணி அருண்குமார், கம்பம் நகர பொறுப்பாளர் செந்தில்குமார் உள்ளிட்ட மாவட்ட, நகர மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் பலரும் உடனிருந்தனர்.



## ஜெருசலேம் புனித பயணம் மேற்கொண்டு திரும்பும் கிறித்தவர்களுக்கு மானியம் வழங்கும் திட்டம்

தமிழ்நாட்டைச் சார்ந்த அனைத்து பிரிவினரையும் உள்ளடக்கிய 600 கிறித்தவர்கள் பயனடையும் வகையில் ஜெருசலேம் புனித பயணம் மேற்கொண்டு திரும்பும் 550 கிறித்தவர்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ.37,000/ வீதமும், 50 கன்னியாஸ்திரிகள் / அருட்சகோதரிகளுக்கு நபர் ஒருவருக்கு ரூ.60,000/வீதமும் ECS முறையில் நேரடியாக மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் ஜெயசலேம் புனித பயணம் மேற்கொண்டு திரும்பும் கிறித்தவ மத பயணாளிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

நல இதற்கான விண்ணப்ப படிவத்தினை மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் அலுவலகத்திலிருந்து கட்டணமின்றி பெறலாம். மேலும், www.bcmbcmw.tn.gov.in என்ற இணையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை 31.01.2027க்குள் உரிய ஆவணங்களுடன் அனுப்ப வேண்டிய முகவரி ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, கலசமஹால் பாரம்பரிய கட்டடம், முதல் தளம், சேப்பாக்கம். 600 005.



## புகையிலை விற்ற 4 கடைக்கு அபராதம் விதிப்பு; மொத்தம் ஒரு லட்சம் ரூபாய் அபராதம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவின்படி உணவு பாதுகாப்பு துறையின் மாவட்ட நியமன அலுவலர் டாக்டர்.V.ஜெயராமபாண்டியன் தலைமையில் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் சங்கரநாராயணன், க.சக்திமுருகன் , ரவி ,பிரவீன் ரகு ஆகியோர் இணைந்து குலசேகரன்புதூர்,திருமலைபுரம், மைலாடி,ஜேம்ஸ்டவுண்,ராஜாவூர், அஞ்சுகிராமம், அக்கரை, சுசீந்திரம் ஆகிய பகுதிகளில் 42 கடைகளை ஆய்வு செய்தனர். ஆய்வின்போது 4 கடைகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட கணேஷ் புகையிலை,கூல் லிப் மற்றும் மெல்லும் புகையிலை பாக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டு உடனடியாக அந்த கடைகள் மூடப்பட்டன.இது போன்ற தடைசெய்யப்பட்ட புகையிலை விற்பனை குறித்த புகார்களை 9444042322 என்ற வாட்சப் எண்ணிலும் தெரிவிக்கலாம் என்று கன்னியாகுமரி மாவட்ட உணவு பாதுகாப்பு துறையின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## திண்டுக்கல் மாவட்ட சரகம் தேனியில் நடைபெற்ற ஊர் காவல் படையினருக்கான 30வது மாநில அளவிலான ஊர் காவல் படை விளையாட்டு போட்டி

**திண்டுக்கல் மாவட்ட சரகம் தேனியில் நடைபெற்ற ஊர் காவல் படையினருக்கான 30வது மாநில அளவிலான ஊர் காவல் படை விளையாட்டு போட்டி.**

**திண்டுக்கல் மாவட்ட ஊர்க்காவல் படையினர் கலந்து கொண்டு தீயணைப்பு மற்றும் மீட்பு பணி பிரிவு போட்டியில் முதல் பரிசு பெற்றனர்.**

**இந்நிலையில் முதல் பரிசு பெற்ற திண்டுக்கல் ஊர்க்காவல் படையினரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் நேரில் அழைத்து பாராட்டினார்**

## மக்களின் தேவைகளை நேரில் கேட்டறிந்து கிராம வளர்ச்சி பணிகள் தேர்வு; TN VETRI திட்டத்தில் PRA களப்பயிற்சி

### திருவண்ணாமலை மாவட்டத்தில் தீவிர நடவடிக்கை

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் செயல்படுத்தப்பட உள்ள TN VETRI – தமிழ்நாடு கிராமங்கள் அதிகாரம் பெறுதல், மாற்றம் மற்றும் புத்துணர்ச்சி முன்முயற்சித் திட்டத்தின் கீழ், கிராம மக்களின் தேவைகளை நேரடியாகக் கண்டறிந்து அதனடிப்படையில் வளர்ச்சிப் பணிகளைத் தேர்வு செய்வதற்கான Participatory Rural Appraisal (PRA) பயிற்சி நடைபெற்றது.



மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் அறிவுறுத்தலின்படி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக ஆய்வுக்கூட்டரங்கில் திங்கள்கிழமை (05.10.2026) நடைபெற்ற பயிற்சியில், உதவி இயக்குநர் நிலையிலான அலுவலர்கள், உதவி செயற்பொறியாளர்கள் (ஊரக வளர்ச்சி), மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பணிமேற்பார்வையாளர்கள், மாவட்ட வளப் பயிற்றுநர் மற்றும் வட்டார வளப் பயிற்றுநர்கள் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, PRA முறைகள் குறித்து மாதிரி களப்பயிற்சி துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், கொளக்கரவாடி ஊராட்சிக்குட்பட்ட கொளக்கரவாடி குக்கிராமத்தில் நேரடியாக நடைபெற்றது. இதில் பயிற்சி பெற்ற அலுவலர்கள் குக்கிராமத்திற்கு நேரில் சென்று பொதுமக்களுடன் கலந்துரையாடினர்.

அப்போது, மக்களின் அடிப்படைத் தேவைகளை நேரடியாகக் கேட்டறிதல், தேவைகளுக்கு முன்னுரிமை நிர்ணயித்தல், குக்கிராமத்தின் தேவைகளை செயல் விளக்க வரைபடம் மூலம் பதிவு செய்தல் மற்றும் அவற்றை மதிப்பீடு செய்தல் உள்ளிட்ட PRA நடைமுறைகள் குறித்து களத்தில் செயல்முறைப் பயிற்சி பெற்றனர்.

மேலும், 07.10.2026 முதல் 17.10.2026 வரை திருவண்ணாமலை மாவட்டத்தின் பல்வேறு குக்கிராமங்களில் PRA மதிப்பீடு மேற்கொள்ளப்பட உள்ளது. இதன் மூலம், பொதுமக்களின் பங்கேற்புடன் அவர்களின் தேவைகள் கண்டறியப்பட்டு, அவற்றின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய வளர்ச்சிப் பணிகளைத் தேர்வு செய்வதற்கான நடைமுறைப் பயிற்சி அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பூ.காஞ்சனா, செயற்பொறியாளர் மா.சிவநாத் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள், பொறியாளர்கள், பணிமேற்பார்வையாளர்கள் மற்றும் வள அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## செங்குன்றம் அண்ணா பேருந்து நிலையம் திறப்பு விழாவை முன்னிட்டு 500 பேருக்கு அறுசுவை உணவு

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி செங்குன்றம் (நாரவாரிக் குப்பம்) தேர்வுநிலை பேரூராட்சியில் புனரமைப்பு செய்யப்பட்ட அறிஞர்அண்ணபேருந்து நிலையம் திறப்பு விழாவில் மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தவெக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டச் செயலாளருமான எம். எல். விஜய் பிரபு சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டுபேருந்து நிலையத்தை திறந்து வைத்து, பின்னர் தவெக செங்குன்றம் நகரச் செயலாளர் கே.விஜி முன்னிலையில் 17வது வார்டு தவெக நிர்வாகியும் கேடி எஸ். மஹால் உரிமையாளருமான காசி விஸ்வநாதன் ஏற்பாட்டில் நடைபெற்ற அறுசுவை அன்னதானத்தை துவக்கி வைத்து, பொதுமக்களோடு அமர்ந்து உணவருந்தினார்.





இந்நிகழ்வில் இணைச் செயலாளர் பைரவா வினோத், பொருளாளர் எம்.சுரேஷ், துணைச் செயலாளர்கள் எம்.எம். மணிகண்டன், ஜெ.காதர் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உறுப்பினர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## கோமதியம்மன் நகர் ஸ்ரீ ஆதி வெங்கடேச பெருமாள் ஆலயத்தில் புரட்டாசி முதலாம் ஆண்டு மூன்றாவது வார சனிக்கிழமை திருவிழா





மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி கோமதியம்மன் நகரில் அமைந்துள்ள ஸ்ரீ ஆதி வெங்கடேச பெருமாள் ஆலயத்தில் புரட்டாசி முதலாம் ஆண்டு மூன்றாவது வார சனிக்கிழமை திருவிழா ஆலய நிர்வாகிகள், கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மூலவர் சுவாமிக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து பஜனையுடன்பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

இவ்விழாவில் சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர்.

முடிவில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டது.

## கருவறை அபிஷேக தரிசனத்துக்கு புதிய நடைமுறை:

# சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் அனுமதி இல்லை; மருத்துவப் பரிசோதனை கட்டாயம் இல்லை - தேவையானவர்களுக்கு மட்டும் ORS, சிகிச்சை

## இணை ஆணையர் ஜெ. பரணிதரன் விளக்கம்!

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயிலில் கருவறை அபிஷேக தரிசனத்தில் பங்கேற்கும் பக்தர்களின் பாதுகாப்பு மற்றும் உடல்நலனை கருத்தில் கொண்டு புதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதே நேரத்தில், அபிஷேக தரிசனத்திற்கு வரும் அனைத்து பக்தர்களுக்கும் மருத்துவப் பரிசோதனை கட்டாயம் என்ற தகவல் உண்மைக்கு புறம்பானது என கோயில் நிர்வாகம் விளக்கம் அளித்துள்ளது.



திருவண்ணாமலை அருணாசலேசுவரர் திருக்கோயிலுக்கு தினந்தோறும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் மட்டுமின்றி, வெளிமாநிலங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். குறிப்பாக சனி, ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் விசேஷ நாட்களில் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால், கோயிலில் கூட்ட நெரிசல் ஏற்படுகிறது.

**சுமார் $1\frac{1}{2}$ மணி நேரம் அமர்ந்து தரிசனம்**

அபிஷேக தரிசனத்தின் போது பக்தர்கள் சுவாமி சன்னதியில் சுமார் ஒரு மணி நேரமும், அம்மன் சன்னதியில் சுமார் 30 நிமிடங்களும் அமர்ந்து தரிசனம் செய்து வருகின்றனர். இதனால் வயது முதிர்ந்த பக்தர்கள் மற்றும் இதய நோய், சர்க்கரை நோய் உள்ளிட்ட உடல்நலப் பிரச்சினைகள் உள்ளவர்களுக்கு நீர்ச்சத்து குறைபாடு, சோர்வு உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படாமல் தடுக்கும் வகையில் கோயில் நிர்வாகம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

**மருத்துவப் பரிசோதனை கட்டாயம் இல்லை**

அபிஷேக தரிசனத்திற்கு வரும் அனைத்து பக்தர்களுக்கும் மருத்துவப் பரிசோதனை கட்டாயம் இல்லை. மருத்துவப் பரிசோதனை மேற்கொண்ட பின்னரே அபிஷேக தரிசனத்திற்கு அனுமதி வழங்கப்படும் என வெளியான தகவலும் உண்மைக்கு புறம்பானது என கோயில் நிர்வாகம் தெளிவுபடுத்தியுள்ளது.

எனினும், பக்தர்களுக்கு உடல்நலக் குறைபாடு ஏற்படும் சூழ்நிலையில் அல்லது மருத்துவ உதவி தேவைப்படும் நிலையில், தேவையானவர்களுக்கு மட்டும் மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உரிய சிகிச்சை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**தேவையானவர்களுக்கு மட்டும் ORS**

நீண்ட நேரம் அமர்ந்து தரிசனம் செய்வதால் நீர்ச்சத்து குறைபாடு ஏற்படக் கூடிய பக்தர்களுக்கு, குறிப்பாக வயது முதிர்ந்தவர்கள் மற்றும் உடல்நலப் பிரச்சினைகள் உள்ளவர்களுக்கு, அபிஷேக தரிசனத்திற்கு முன்பாக தேவைக்கேற்ப ORS பானம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அபிஷேக தரிசனத்தின்போது உடல்நலக் குறைபாடு ஏற்படும் பக்தர்களை தேவைக்கேற்ப மருத்துவ மையத்திற்கு அழைத்துச் சென்று மருத்துவப் பரிசோதனை மற்றும் உரிய சிகிச்சை வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் அனுமதி இல்லை**

வார இறுதி நாட்களில் பக்தர்களின் வருகை அதிகமாக இருப்பதால், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கருவறை அபிஷேக தரிசனத்தில் பக்தர்கள் பங்கேற்க அனுமதி இல்லை என கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கருவறை பகுதி குறுகலான இடமாக இருப்பதால், ஒரே நேரத்தில் அதிகளவில் பக்தர்கள் கூடும்போது கூட்ட நெரிசல் ஏற்படுவதுடன், மூச்சுத்திணறல் உள்ளிட்ட உடல்நலப் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனைத் தவிர்க்கும் வகையிலும், பக்தர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலும் இந்த நடைமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பக்தர்கள் ஒத்துழைக்க வேண்டுகோள்**

பக்தர்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்கு முன்னுரிமை அளித்து, தேவையானவர்களுக்கு மருத்துவ உதவி, ORS மற்றும் சிகிச்சை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே, அபிஷேக தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் தங்களது உடல்நிலையை கருத்தில்கொண்டு தேவையான முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், கோயில் நிர்வாகம் மற்றும் மருத்துவக் குழுவினரின் அறிவுறுத்தல்களுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதுகுறித்து அருணாசலேசுவரர் திருக்கோயில் இணை ஆணையர் / செயல் அலுவலர் ஜெ. பரணிதரன் வெளியிட்டுள்ள விளக்கத்தில், அனைத்து பக்தர்களுக்கும் மருத்துவப் பரிசோதனை கட்டாயப்படுத்தப்படவில்லை; தேவைப்படும் பக்தர்களுக்கு மட்டும் மருத்துவப் பரிசோதனை, ORS பானம் மற்றும் தேவையான மருத்துவ சிகிச்சை வழங்கப்படும் என தெரிவித்துள்ளார்.

# ஐசிஎஃப் சில்வர் ஜூப்ளி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி






சென்னை அயனாவரம் ஐசிஎஃப் சில்வர் ஜூப்ளி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் கொளத்தூர்சிட்டி லயன்ஸ் சங்கம், சவீதா எஞ்சினியரிங் கல்லூரி ஆகியோர் இணைந்து கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சியை பள்ளியின் முதல்வர் ஆர். பியூலா தலைமையில் பள்ளி வளாகத்தில் நடத்தியது.

துணை முதல்வர் பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அனைவரையும் வரவேற்றார்.

கொளத்தூர் சிட்டி மாவட்டத் தலைவர்கள் சி.செல்வக்குமார், ஏ.ஜி. லெட்சுமி காந்தன், நண்பன் எம்.முகம்மது அபுபக்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மண்டலத் தலைவர் டி.சீனிவாசன் அறிமுக உரையாற்றி லயன்ஸ் சங்கத்தின் சேவைகளை எடுத்துரைத்தார்.

பிரபல கல்வியாளர் ஜெயபிரகாஷ் காந்தி சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு மாணவ மாணவிகளிடையே கல்வியின் முக்கியத்துவத்தையும், அதன் மூலம் வாழ்வில் எவ்வாறு முன்னேறுவது,

அடுத்த ஐந்து ஆண்டுகளில் கல்வியில் ஏற்படக்கூடிய மாற்றங்களையும் எடுத்துரைத்து எந்தெந்த படிப்புகளுக்கு வேலை வாய்ப்புகள் உள்ளன என்பதையும் அழகாக எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வில் சவீதா எஞ்சினியரிங் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் ஹேமமாலினி, டாக்டர் முத்துப்பாண்டி உள்ளிட்ட மாணவமாணவிகள், ஆசிரியஆசிரியைகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




# திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்ற வலியுறுத்தல் - அக்.15ல் தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம்

## பழனியில் செய்தியாளர்களை சந்தித்த இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரர் சுப்பிரமணி

திருப்பரங்குன்றம் மலை தீபத்தூணில் தீபம் ஏற்ற வலியுறுத்தி வரும் அக்டோபர் 15ஆம் தேதி தமிழகம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தெரிவித்தார்.

அக்.16 கந்த சஷ்டியை முன்னிட்டு வீடுகளில் முருகப்பெருமான் திருவுருவப் படத்தை வைத்து கந்த சஷ்டி கவசம் பாராயணம் செய்ய பக்தர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

மேலும், அக்.25ல் திருப்பரங்குன்றத்தில் ஆன்மிகப் பெரியோர்கள், மடாதிபதிகள் மற்றும் முருக பக்தர்கள் பங்கேற்கும் கிரிவலம் நடைபெறும் என்றார். கோயில்களில் பக்தர்களுக்கு விதிக்கப்படும் கட்டுப்பாடுகள், கோயில் நிலங்களில் நடைபெறும் கட்டுமானங்கள் உள்ளிட்ட விவகாரங்களில் அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், ஸ்ரீரங்கம் மற்றும் பழனி கோயில்களில் முறைகேடுகள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு அமைச்சர் விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

கோயில்களை நிர்வகிக்க ஓய்வுபெற்ற நீதிபதிகள் மற்றும் நேர்மையான அதிகாரிகள் அடங்கிய தனி வாரியம் அமைக்க வேண்டும் என்றும் காடேஸ்வரர் சுப்பிரமணி தெரிவித்தார்.

# பழனி பேருந்து நிலையத்தில் இருசக்கர வாகனங்கள் செல்ல தடை TARATDAC வரவேற்பும் முக்கியமான வேண்டுகோளும்





திண்டுக்கல் மாவட்டம் பழனி பேருந்து நிலையத்திற்கு நாள்தோறும் ஏராளமான பொதுமக்கள் வந்து செல்கிறார்கள். இவ்வாறு வந்து செல்லும் பொதுமக்களுக்கு இடையூறாக பேருந்து நிலையம் முழுவதும் இங்கும் அங்குமாக இருசக்கர வாகனங்கள் செல்வதால் விபத்து ஏற்ப்படும் அபாயமும் இதனால் மாற்றுத்திறனாளிகள் உருவாகும் அபாயமும் உள்ளது. எனவே, இதற்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என TARATDAC சங்கத்தின் சார்பில் தொடர்ச்சியாக பலமுறை வலியுறுத்தியும், மனு அளித்தும், போராடியும் வந்ததன் பலனாக கடந்த வாரம் முதல் பழனி பேருந்து நிலையத்திற்குள் பேருந்து அல்லாத எவ்வித வாகனங்களும் செல்ல காவல்துறையால் தடை விதிக்கப்பட்டது. காவல்துறையின் இந்த உத்தரவை எங்களது சங்கத்தின் சார்பில் வரவேற்கிறோம்.






இராணிப்பேட்டை மாவட்டம் பள்ளிக் கல்வித்துறை சார்பில் இராணிப்பேட்டை வருவாய் மாவட்ட அளவிளான குடியரசு தின தடகளம் போட்டிகள் (2026,2027) க்கான போட்டிகள் 06.10.26 செவ்வாய்க்கிழமை ஆற்காடு தனியார் பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன இப்போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர் வீராங்கனைகளுக்கு மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் விஸ்வநாதன் மற்றும் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ச.ஞானசேகரன் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி சான்றிதழ் மற்றும் பதக்கங்களை வழங்கினார்கள்!

## இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு திமிரி அருகே

# ஆதரவற்ற பள்ளி குழந்தைகளுக்கு நல திட்ட உதவிகள் வழங்கும் விழா

இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு திமிரி அருகே உள்ள காவனூர் இந்திரா நர்சரி மற்றும் தொடக்கப் பள்ளியில் கடந்த 41 ஆண்டுகளாக பெற்றோர்களை இழந்த இரண்டாம் பருவ பாட புத்தகம் நோட்டு ஆகியவை இலவசமாக வழங்கும் விழா பள்ளி நிர்வாகி ஆர் சேட்டு தலைமையில் நடைபெற்றது. பள்ளி கணக்காளர் கே லட்சுமி தலைவர் பொன் கு சரவணன் கலந்துகொண்டு பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு இரண்டாம் பருவ கல்வி உபகரணங்களை வழங்கி பாராட்டி பேசினார். இந்நிகழ்ச்சி



குழந்தைகளை கண்டெடுத்து அவர்களுக்கு எந்த வித கட்டணமும் வாங்காமல் எல்கேஜி முதல் ஐந்தாம் வகுப்பு வரை இலவசமாக படிக்க வைத்து வருகிறார்கள் அந்த வகையில் இந்த ஆண்டு 14 குழந்தைகளுக்கு எந்த வித கட்டணமும் வாங்காமல் பள்ளி கணினி ஆசிரியர் எம் சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி தலைமை ஆசிரியர் எம் கோபி அனைவரையும் வரவேற்று பேசினார். இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளராக ராணிப்பேட்டை மாவட்ட வணிகர்சங்க பேரவை மாவட்டயில் ஆற்காடு அனைத்து வியாபாரிகள் சங்க செயலாளர் எஸ் பாஸ்கரன் பெல். எஸ் பிரபு ஆகியோர் கலந்துகொண்டு குழந்தைகள் நன்கு படிக்குமாறு வாழ்த்தினார்கள் . முடிவில் பள்ளி உதவி ஆசிரியை எஸ். சரண்யா நன்றி கூறினார்



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., வாலாஜா வட்டம், அம்மூர் பேரூராட்சி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் மாணாக்கர்களின் கற்றல் அறிவுத் திறன் குறித்து ஆய்வு மேற்கொண்டு, மாணாக்கர்களுடன் கலந்துரையாடினார். உடன் முதன்மை கல்வி அலுவலர் மோகனா மற்றும் பலர் உள்ளனர்.

# திருவண்ணாமலை ஆட்சியர் வந்தனா கார்க் முன்னிலையில் அதிரடி நடவடிக்கை: 125 சட்டவிரோத நாட்டுத் துப்பாக்கிகள் அழிப்பு

திருவண்ணாமலை மாவட்டத்தில் வன உயிரினங்களை பாதுகாக்கவும், சட்டவிரோத வேட்டையை தடுக்கவும் வனத்துறை மேற்கொண்ட நடவடிக்கையின் பலனாக பொதுமக்களால் தாமாக முன்வந்து ஒப்படைக்கப்பட்ட 125 சட்டவிரோத நாட்டுத் துப்பாக்கிகள், மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் முன்னிலையில் சாலை உருளை மூலம் அழிக்கப்பட்டன.

வன உயிரின வார விழாவை முன்னிட்டு, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (06.10.2026) நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் முன்னிலையில் சட்டவிரோத நாட்டுத் துப்பாக்கி கள் சாலை உருளை மூலம் அழிக்கப்பட்டன.

வன உயிரின பாதுகாப்புச் சட்டம், 1972ன் கீழ் வன உயிரினங்களைபாதுகாப்பதற்கும், சட்டவிரோத வேட்டையை தடுப்பதற்கும் திருவண்ணாமலை வனக்கோட்டத்தில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. உரிமம் இல்லாமல் நாட்டுத் துப்பாக்கிகள் வைத்திருக்க வாய்ப்புள்ள கிராமங்கள் வனச்சரக வாரியாககண்டறியப்பட்டு, அப்பகுதி மக்களிடம் துப்பாக்கி களை தாமாக முன்வந்து ஒப்படைக்குமாறு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.




இதற்காக கிராமங்களில் ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு செய்தல், பொதுமக்கள் விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்துதல், கிராம வனக்குழு மற்றும் சூழல் மேம்பாட்டுக்குழு உறுப்பினர்களுடன் ஆலோசனை நடத்துதல், வீடு வீடாகச் சென்று துண்டுப் பிரசுரங்கள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், வனம் மற்றும் வன உயிரின குற்றங்களில் ஈடுபட்ட முன்னாள் குற்றவாளிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், களப்பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்ற விழிப்புணர்வு அணிவகுப்பு நடத்துதல், வன உரிமைச் சட்டத்தின் கீழ் உரிமை பெற்றவர்களின் கடமைகளை விளக்குதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக, பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் தங்களிடம் இருந்த சட்டவிரோத நாட்டுத் துப்பாக்கிகளை தாமாக முன்வந்து ஒப்படைத்தனர். பொதுமக்கள் குறிப்பிட்ட பொதுவான இடங்கள், மறைவான இடங்கள் மற்றும் கிராமக் கோவில்கள் உள்ளிட்ட இடங்களில் வைக்கப்பட்டிருந்த துப்பாக்கிகளை வனத்துறையினர் கைப்பற்றினர். திருவண்ணாமலை வனக்கோட்டத்தில் உள்ள 9 வனச்சரகங்களில் மொத்தம் 125 சட்டவிரோத நாட்டுத் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன. அவை அனைத்தும் மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் முன்னிலையில் சாலை உருளை மூலம் அழிக்கப்பட்டன.

இதில் நாடானூர் வனச்சரகத்தில் அதிகபட்சமாக 41 துப்பாக்கிகளும், சந்தவாசல் வனச்சரகத்தில் 22, மேல்பட்டு 19, போளூர் 17, ஜமுனாமரத்தூர் 15, தானிப்பாடி 3, சாத்தனூர் 3, திருவண்ணாமலை 3, செங்கம் 2 என மொத்தம் 125 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. வன உயிரினங்களை பாதுகாப்பதில் பொதுமக்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். வனத்துறையின் தொடர் விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் அளித்த ஒத்துழைப்பின் காரணமாக,

சட்டவிரோத நாட்டுத் துப்பாக்கிகளை தாமாக முன்வந்து ஒப்படைத்திருப்பது வன உயிரினப் பாதுகாப்பு நடவடிக்கைக்கு கிடைத்துள்ள முக்கிய வெற்றியாக கருதப்படுகிறது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரா.உதயகுமார், மாவட்ட வன அலுவலர் கு.சுதாகர், மாவட்ட வருவாய் அலுவலர் அ.சிவசுப்பிர மணியன், உதவிவனப்பாதுகாவலர்க.வினோத்ராஜ் மற்றும் வனச்சரக அலுவலர்கள் எம்.முருகன், குணசேகரன், வெங்கடாச்சலம், விஜயசாரதி, மணிகண்டன், தமிழரசன், கமலாசணன், கோகுல்நாத், சக்திவேல் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை ரெட்ஹில்ஸ் கேரள சமாஜம் சார்பில் ஓணம் விழா



சென்னை ரெட்ஹில்ஸ் கேரள சமாஜத்தின் சார்பில் ஓணம் விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவை ஃபேமா தமிழ்நாடு பிரிவு தலைவர் கல்பககோபாலன்தொடங்கி வைத்தார். சமாஜம் தலைவர் பி. உன்னிகிருஷ்ணன் தலைமை வகித்தார். மதராசி கேரள சமாஜம் பொதுச் செயலாளர் கோபகுமார், சுமிதி அம்மாள் அறக்கட்டளை நிறுவனர் இ.ராஜேந்திரன், கும்மிடிப்பூண்டி கையரளி அசோசியேஷன் தலைவரும் ஜீவகாருண்யப் பணியாளருமான ஜெ. கிளெமென்ட் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

சமாஜம் ஆலோசகர்கள் பி. வாசுநாயர், வி.ஏ. கங்காதரன், ஏ.வி.என். தேவன், துணைத் தலைவர் எஸ்.ஜெயபிரகாஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். பொதுச் செயலாளர் டி. ராதாகிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றார். பொருளாளர் ஜி.கோ. பாஸ்கரன் நன்றி கூறினார்.

விழாவில் செண்டை மேளத்தின் அணிவகுப்புடன் மாவேலி மாவேலி எழுந்தருளல், வடம் இழுக்கும் போட்டி, பெண்களின்திருவாதிரை நடனம், குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள், 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் சிறப்பான மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு ரொக்கப் பரிசு மற்றும் விருதுகள் வழங்குதல், ஓணசத்யா, அம்மு ஸ்டேஜ் விஷன் குழுவினரின் நாட்டுப்புறப் பாடல் நிகழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்நிகழ்ச்சிக்கு இணைச் செயலாளர்கள் ஓ.சுரேஷ், பி.ஹரிதாசன் மற்றும் விழாக்குழு உறுப்பினர்கள் ஆர்.சஜீவ்குமார், டி.அனில்குமார், வி.வாசுதேவன், டி.பி. பிரசாத், வி.கே.சுரேஷ், வி. ராமச்சந்திரன், கே. அச்சுதன், சி. கோபி, சி.ஜெயகிருஷ்ணன், சி.கிரிவாசன், வி.வருண், ஏ.வி.என். விஜயகுமாரி ஆகியோர் முன்னிலை வகித்து நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தனர்.

தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779

# பழனி அருகே சட்டவிரோத மது விற்பனை - 83 மதுபாட்டில்களுடன் வாலிபர் கைது



திண்டுக்கல் மாவட்டம், பழனி அருகே கோதமங்கலம் பகுதியில் சட்டவிரோதமாக மதுபாட்டில்கள் விற்பனை செய்ததாக பெரிச்சிபாளையம் மேற்குத் தெருவைச் சேர்ந்த முகமது யூசுப் (26) என்பவரை போலீசார் கைது செய்தனர்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் அறிவுறுத்தலின்படி டிஸ்பி தேவராஜ் உத்தரவின்படியும், ஆய்வாளர் சத்தியமூர்த்தி தலைமையிலானபோலீசார் நடத்திய சோதனையில், விற்பனைக்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 83 மதுபாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

கைது செய்யப்பட்ட முகமது யூசுப்(26) மீது வழக்குப் பதிவு செய்து நீதிமன்ற நடவடிக்கைக்குப் பின்னர் சிறையில் அடைக்கப்பட்டார்.

மேலும், சட்டவிரோதமதுவிற்பனையில் தொடர்புடையவர்கள் குறித்தும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சட்டவிரோத மது விற்பனை, புகையிலைப் பொருட்கள் மற்றும் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் விற்பனை செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஆய்வாளர் சத்தியமூர்த்தி எச்சரித்துள்ளார்.




திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் வேலைவாய்ப்பு (ம) பயிற்சித்துறை சார்பில் வருகின்ற 10.10.2026 அன்று மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு (ம) தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் தொடர்பாக பிரச்சார வாகனத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா கொடியசைத்து துவக்கி வைத்தார். மாவட்ட வேலைவாய்ப்பு (ம) தொழில்நெறி வழிகாட்டும் மைய உதவி இயக்குநர் க.விஜயா, துணை ஆட்சியர் (பயிற்சி) ச.சபரி கிருஷ்ணன் மற்றும் பல்துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# வாலாஜா அரசு தலைமை மருத்துவமனையில் 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் சார்பில் மாதாந்திர கலந்தாய்வு கூட்டம்



ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா அரசு தலைமை மருத்துவமனையில் 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் சார்பில் மாதாந்திர கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

இந்த கலந்தாய்வு கூட்டத்தில் 108 ஆம்புலன்ஸ் சேவை திட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் 1353 ஆம்புலன்ஸ்கள் இயங்கப்பட்டு வருகிறது.

இதில் ஒரு பகுதியான ராணிப்பேட்டை மாவட்டத்தில்19க்கும் மேற்பட்ட ஆம்புலன்ஸ் களில் 95க்கும் மேற்பட்ட ஆண் பெண் தொழிலாளர்கள் 12:00 மணி நேரம் பணி நேரமாக கொண்டு இரவும் பகலாக பணி பார்த்து வருகின்றனர்.

மேலும் 108 ஆம்புலன்ஸ் சேவை திட்டத்தை அரசு தனியார் கூட்டு பேர பங்களிப்பின் முறையில்(Public private partnership) நிர்வகித்து வரும் EMRI GHS நிர்வாகம் கடந்த நான்கு மாதங்களாக பெரும்பான்மையான தொழிலாளர்களுக்கு சட்டவிரோத சம்பள வெட்டுடன் சம்பளம் வழங்கி வருகிறது. இது குறித்து 108 ஆம்புலன்ஸ் சேவை திட்டத்தின் திட்ட இயக்குனரிடம் ( PD ) அவர்களிடம் புகார் தெரிவித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை ஆகவே உள்நோக்கத்துடன் முறையாக வேலை பார்த்த தொழிலாளர்களிடம் மேற்கொள்ளப்படும் EMRI GHS நிர்வாகத்தின் சட்டவிரோத சம்பள வெட்டுக்கு எதிராக வேலூர் மாவட்ட தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் ஊதியம் வழங்கல் சட்டம் 1936ன் கீழ் புகார் அளித்து EMRI GHS நிர்வாக அதிகாரிகளின் மீது உரிய நடவடிக்கை எடுத்து தொழிலாளர்களுக்கு எந்த வித சம்பள வெட்டு நடவடிக்கையும் இல்லாமல் சம்பளம் வழங்க கோருவது தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலூரம் தொடர்ந்து நிர்வாகம் உள்நோக்கத்துடன் முறையாக வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு சட்டவிரோத சம்பள வெட்டு செய்யும் நடவடிக்கையை கண்டித்து தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி விரைவில்களபோராட்டம் அறிவிப்பதற்கு மாநில கமிட்டிக்கு அதிகாரம் வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.இந்தக் கலந்தாய்வுக் கூட்டத்தில் தொழிற் தீர்ப்பாயத்தின் மூலம் வழங்கப்பட்ட தீர்ப்புகளின் படி முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது என்னவென்றால் : 1.)சட்டபடியான 8 மணி நேர வேலை நேரத்தை எந்த வித சம்பள குறைப்பும் செய்யாமல் EMRI GHS நிர்வாகம் அமல்படுத்தாதது 2.)சட்டவிரோத பணி நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு 18(1) ஒப்பந்தத்தின் படி உடனடியாக மீண்டும் பணி வழங்காதது. 3.)108 ஆம்புலன்ஸ் சேவை திட்டத்தில் பணி பார்க்கும் பெண் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான தனி பணியிட வசதி மற்றும் கழிவறை வசதி ஏற்படுத்தி தராதது. 4.)வருடாந்திர ஊதிய உயர்வு 25% மற்றும் தீபாவளி போனஸ் 8.33 % வழங்கிட வேண்டும் என்ற தொழிற் தீர்ப்பாயத்தின் தீர்ப்பின்படி முறையாக தொழிற்சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வழங்காதது

இது போன்ற நீதிமன்ற தீர்ப்புகளை நடைமுறைபடுத்தாத EMRI GHS நிர்வாக அதிகாரிகள் மீது நேர்மையற்ற தொழில் நடவடிக்கை தொழிற் தகராறுகள் சட்டம் 1947 பிரிவு 25T யின் கீழ் அபராதம் அல்லது சிறை தண்டனை அல்லது இரண்டையும் வழங்கிட கோரி வழக்கத் தொடுப்பது எனவும் தொடர் போராட்டங்களை முன்னெடுப்பது எனவும் மேலும் பல்வேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# குழந்தையை தத்துக்கொடுக்க ஆட்சேபனை இருப்பின் தகவல் தெரிவிக்கலாம்

## திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா தகவல்



திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு, தேவி நகர், 8வது தெரு எண்:13 என்ற முகவரியில் வசித்து வந்த ஜெயக்குமார் மற்றும் காஞ்சனாமாலா என்பவர்களின் மகள் சர்மிளா (வயது4) என்ற குழந்தையை பராமரிக்க இயலாத காரணத்தால் கடந்த 11.01.2013 அன்று சென்னை, கெல்லீஸ் குழந்தைகள் நலக் குழு மூலம் குழந்தை சர்மிளா "பாலமந்திர்'' சிறப்பு தத்து மையத்தில் தற்காலிகமாக ஒப்படைக்கப்பட்டு, இல்லத்தில் குழந்தை பராமரிக்கப்பட்டு வந்த நிலையில் குழந்தையை தாயார் ஒருமுறை மட்டும் பார்க்க வந்துள்ளனர்.

அதன் பின்னர் குழந்தையை இந்நாள் வரை பெற்றோர் பார்க்க வரவில்லை.

இக்குழந்தைக்குரியவர்கள் யாரேனும் இருப்பின் தங்கள் ஆட்சேபனையை இவ்வறிவிப்பு வெளியான நாளிலிருந்து 15 நாட்களுக்குள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு

அலகு, எண்.118, 'D;' பிளாக், முதல் தளம், மாவட்ட ஆட்சியரகம், திருவள்ளூர் 602 001 என்ற முகவரியில் தெரியபடுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இக்குழந்தையை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் ஆட்செபனை ஏதும் தெரிவிக்கப்படாத பட்சத்தில்,

குழந்தையை தத்தெடுப்பதற்காக சட்ட ரீதியாக தகுதி பெற்ற குழந்தையாக அறிவிப்பதில் எந்தவித ஆட்செபனையும் இல்லை என்று கருதப்பட்டு,

தத்தெடுப்பு விதிகளின்படி, குழந்தையை தத்தெடுப்பதற்காக சட்ட ரீதியாக தகுதி பெற்ற குழந்தையாக அறிவிப்பதற்கான தேவையான மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா அறிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே இருசக்கர வாகனத்தில் இருந்து தவறி விழுந்த இளைஞர் உயிரிழந்தனர் பழனி அருகே மருத்துவ நகரை சேர்ந்த கிருஷ்ணன் மகன் சபரிநாதன் வயது 20 இவ திங்கட்கிழமை கொடைக்கானல் சாலையில் இருசக்கர வாகனத்தில் சென்றபோது ஆல மரத்துக்களம் அருகே தவறி விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் இது குறித்து தாலுகா போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர் இச்சம்பவம் ஆலமரத்து களம் பகுதியில் சிறிது நேரம் படபடப்பை ஏற்படுத்தியது

திண்டுக்கல் மாவட்டம் பழனி எம்ஜிஆர் நகர் பஸ் ஸ்டாப்பில் நின்றிருந்த துணை தாசில்தாரிடம் செயின் பறிக்க முயற்சித்த இருவர் போலீசார் கைது செய்தனர் பழனி எம்ஜிஆர் நகர் பகுதியில் வசிப்பவர் திண்டுக்கல் தெற்கு துணை தாசில்தார் சித்ரா வயது 42 நேற்று காலை பணிக்கு செல்ல திண்டுக்கல் ரோட்டில் உள்ள எம்ஜிஆர் நகர் பஸ் ஸ்டாப்பில் நின்றிருந்த போது அப்போது டூவீலரில் அதிவேகமாக வந்த இருவர் தாசில்தார் கழுத்தில் அணிந்திருந்த செயினை பறிக்க முயற்சித்தனர் துணை தாசில்தார் அதிர்ஷ்டவசமாக லாபகமாக தப்பினார் அவர் அருகில் இருந்தவர்கள் போலீசாருக்கு தகவல் அளித்தனர் அதன்படி பழனி டவுன் போலீசார் டூவீலரில் துரத்தி சென்றனர் ஆயக்குடி போலீஸ் ஸ்டேஷன் அருகே அமைக்கப்பட்டுள்ள சோதனை சாவதியில் செயின் பறிக்க முயற்சித்த நபர்களை பிடித்து விசாரணை செய்த போது அதில் மதுரையைச் சேர்ந்த ஆரப்பாளையம் பகுதி சந்துரு வயது 23 சரவணகுமார் வயது 20 என தெரிய வந்தது இருவரையும் பழனி டவுன் போலீசார் கைது செய்தனர்



சுற்றுலாத்தலமான கொடைக்கானல் நுழைவாயில் பகுதியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளி எதிரே கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு நெடுஞ்சாலை துறையால் தோண்டப்பட்ட பள்ளத்தால் தினம்தோறும் விபத்தை சந்திக்கும் சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள்

வார இறுதி நாட்கள் மற்றும் தொடர் விடுமுறை நாட்களில் ஆயிரக்கணக்கான வாகனங்கள் இந்தச் சாலை வழியாகத்தான் கொடைக்கானலுக்கு செல்கின்றன மேலும் மக்களின் முக்கிய சாலையாக உள்ள இந்த சாலையில் குழியை தோண்டி போட்டுவிட்டு நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் மறந்து போய் உள்ளனர்

தூக்கத்தில் இருக்கும் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் மக்கள் மீது கவனம் செலுத்தி உடனடி நடவடிக்கை எடுப்பார்களா? பணிகளை துவங்குவார்களா மிகப் பெரிய விபத்து ஏற்படுவதற்கு முன்பு மாவட்ட நிர்வாகம் தலையிட்டு நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளை உடனடியாக பணி செய்வதற்கு அறிவுறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கொடைக்கானல் பகுதி மக்கள் கோரிக்கை வைக்கின்றனர்

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA